ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2465/09 - 2025 දෙසැම්බර් මස 02 වැනි අඟහරුවාදා - 2025.12.02
*2465/09 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 02 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

**1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம்**

**64 (5) ஆம் பிரிவின் கீழ் வெற்றிடமொன்றை நிரப்புதல்**

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றான ஐக்கிய மக்கள் சக்தி கட்சியினால் பெயர் குறித்து, அரசியலமைப்பின் 99அ உறுப்புரையின் கீழ் பாராளுமன்ற உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட்ட **திரு. முஹம்மது இஸ்மாயில் முத்து முஹம்மது அவர்கள்** கேட்டு விலகியமையின் காரணமாக பத்தாவது பாராளுமன்றத்தின் உறுப்பாண்மையில் வெற்றிடமொன்று ஏற்பட்டுள்ளதென்று, 1988 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 6 வது பிரிவினால் திருத்தியமைக்கப்பட்ட 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 64(5) ஆம் பிரிவிற்கிணங்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தினால் தேர்தல் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டிருப்பதனாலும் ;

அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்காக அந்த அரசியற் கட்சியின் செயலாளருக்கு மேலே குறிப்பிடப்பட்ட பிரிவின் கீழ் தகைமையுடைய ஒருவரை பெயர் குறிப்பிடுமாறு தேர்தல் ஆணைக்குழுவினால் பணிக்கப்பட்டுள்ளமையினாலும்;

மேற்கூறப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கென **திரு.நெய்னா தம்பி மரிக்கார் மொஹமட் தாஹிர்** அவர்களை பெயர் குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும்;

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் பத்தொன்பதாம் திருத்தத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 64(5) ஆம் பிரிவிற்கமைய நடவடிக்கை மேற்கொண்டு, மேற்குறித்த **திரு. முஹம்மது இஸ்மாயில் முத்து முஹம்மது** அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்

1A - PG 7377 — 373 (2025/12)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

பதவியிலிருந்து கேட்டு விலகியமையின் காரணமாக ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை நிரப்புவதற்காக **திரு.நெய்னா தம்பி மரிக்கார் மொஹமட் தாஹிர்** அவர்கள் பத்தாவது பாராளுமன்றத்தின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரெனத் தேர்தல் ஆணைக்குழுவினால் இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க,
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு.

எம்.ஏ.பீ.சீ.பெரேரா,
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

அமீர் பாயிஸ்,
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

ஏ. சண்முகநாதன்,
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

தேர்தல் ஆணைக்குழு,
இராஜகிரிய,
2025, திசெம்பர் மாதம் 02 ஆம் திகதி.

EOG 12 - 0009